Literacy for a Billion

Movie: Ninaive Oru Sangeetham
Year: 1987

Song: Eathamayaa
Lyricist: Illaiyaraja

முந்தி முந்தி விநாயகரே
முப்பது முக்கோடி தேவர்களே
நீர் கொடுத்த நீரையெல்லாம்
நீர் கொடுத்த நிலத்துக்கே
பாய்ச்சப்போறேன்
சீராக ஏரோட்டி
பார் முழுக்க சோறு கொடுத்து
காக்கப் போறேன்
ஆதரிக்க வேணுமைய்யா
ஏத்தமைய்யா ஏத்தம்
ஏலோலங்கடி
ஏத்தமைய்யா ஏத்தம்
ஏத்தமைய்யா ஏத்தம்
ஏலோலங்கடி
ஏத்தமைய்யா ஏத்தம்
எங்கப்பன் ஒம்பாட்டன்
முப்பாட்டன் சொத்து இது
ஏத்தமைய்யா ஏத்தம்
ஏலோலங்கடி
ஏத்தமைய்யா ஏத்தம்
ஏலோலங்கடி
ஏத்தமைய்யா ஏத்தம்
உனக்கு ரொம்ப
ஏக்கமைய்யா ஏக்கம்
ஏலோலங்கடி
ஏத்தமைய்யா ஏத்தம்
உனக்கு ரொம்ப
ஏக்கமைய்யா ஏக்கம்
கோவணத்தில் ஒரு காசிருந்தா
கோழி கூவ ஒரு பாட்டு வரும்
பாட்டு படிக்கிற என்மாமா
உன் கோவணத்தில் ஒரு
காசிருக்கா
கோவணமும் இல்ல
கையில் காசும் இல்ல

பாட்டு வருதே என்ன புள்ளே
கோயில்சிலை போல
உன்னை கண்டதால்
ஏக்கம் கெடுதே கன்னிப்புள்ள
சேலையை பாத்தாலே
துள்ளி போகுறியே மாமா
வேலையை பார் மாமா
அந்த வெட்டி பேச்சு ஏன்மாமா
காஞ்ச வயலுலே
தண்ணியை பாய்ச்சணும்
பஞ்சத்தை தீக்கணும்
பசிதாகம் போக்கணும்
ஏத்தமைய்யா ஏத்தம்
உனக்கு ரொம்ப
ஏக்கமைய்யா ஏக்கம்
ஏத்தமைய்யா ஏத்தம்
உனக்கு ரொம்ப
ஏக்கமைய்யா ஏக்கம்
சுவிச்சு ஒண்ண தட்டி
உட்டுப்புட்டா
பம்புசெட்டுலே தண்ணி
கொட்டிபுடும்
அச்சு வேலை செய்ய
வக்கில்லையே
இங்கு வக்கணை பேச்சு
ஏன் மாமா
சுவிச்சு ஒண்ண தட்டி
உட்டுப்புட்டா
பம்புசெட்டுலே தண்ணி
கொட்டிபுடும்
அச்சு வேலை செய்ய
வக்கில்லையே
இங்கு வக்கணை பேச்சு
ஏன் மாமா
யந்திரம் வச்சு வேல செய்யலாம்

Literacy for a Billion

நாம் என்ன செய்ய பூமியிலே
மண்ணோட மனுசன்
மனசு இணையும்
மகத்துவம் வருமா
சொல்லு புள்ள
மண்ணு வெளஞ்சாலே
அது வேணாங்குதா மாமா
கையில் பொன்னு நிறைஞ்சாலே
அது பொல்லாததா மாமா
விஞ்ஞான காலத்தில்
எல்லாமே மெஷினு
மனுசன் மனசுகூட
மெஷினாச்சு போ புள்ள
ஏத்தமைய்யா ஏத்தம்
உனக்கு ரொம்ப
ஏக்கமைய்யா ஏக்கம்
ஏத்தமைய்யா ஏத்தம்

உனக்கு ரொம்ப
ஏக்கமைய்யா ஏக்கம்
உங்கப்பன் ஒம்பாட்டன்
முப்பாட்டன் சொத்து இது
ஏத்தமைய்யா ஏத்தம்
ஏலோலங்கடி
ஏத்தமைய்யா ஏத்தம்
ஏலோலங்கடி
ஏத்தமைய்யா ஏத்தம்
ஏலோலங்கடி
ஏத்தம் ரொம்ப ஏத்தம்
உனக்கும்கூட
ஏக்கம் ரொம்ப ஏக்கம்
ஏத்தம் ரொம்ப ஏத்தம்
உனக்கும்கூட
ஏக்கம் ரொம்ப ஏக்கம்

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.